# அனகாபுத்தூர் நகராட்சி

**சென்னை – 600 070.**

கூட்ட எண்.49/2019 நாள். 08.11.2019

## தனி அலுவலர் அவர்களின் நவம்பர் 2019 மாதம் சிறப்புக் கூட்டப்பொருள்

08.11.2019ம் நாள் வெள்ளிகிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் நடத்தப்பெறும் சிறப்புக் கூட்டப் பொருள் .

**பொருள் எண். 1**

அனகாபுத்தூர் நகராாட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தால் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் சுமார் 40.10 கி.மீ நீளத்திற்கு பகிர்மான குழாய் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. குழாய் பதிக்க தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் பழுதான சாலைகளை சரி செய்து தருமாறு பொது மக்களிடமிருந்தும், நலச்சங்களிலிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை செப்பனிட விரிவான திட்ட அறிக்கை ரூ.1000.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை சாலை மேம்பாட்டு திட்டத்தில் அரசு நிதி பெற்று பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு தினந்தோறும் குடிநீர் வழங்கும் பொருட்டு 2 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் 55 கிலோ மீட்டருக்கான குடிநீர் பகிர்மான குழாய்கள் சாலையினை தோண்டி அமைக்கும் பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு சுமார் 40.10 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிக்கும் பணிகள் முடிவுற்றது. மேலும் இயற்கை இடர்பாடுகளால் சாலைகளை பழுதடைந்துள்ளது. இச்சாலைகள் அனைத்தும் மிகவும் சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே சாலைகளை செப்பணிட பட வேண்டியுள்ளதால் சாலை மேம்பாட்டு திட்டத்தில் அரசு நிதி பெற்று சாலை பணிகளை மேற்கொள்ளலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி